ஸ்ரீ:



ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ஸ்ரீ சடகோபாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீ ராமானுஜாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ வேதாந்ததேசிக யதீந்த்ர மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா சேவக
ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ நாராயண யதீந்த்ர மஹாதேசிகாய நம:

# நாலாயிர திவ்ய ப்ரபந்தம்

# திருநெடுந்தாண்டகம்


## ஸ்ரீ அஹோபில மட தயாரிப்பு

(May 2000)



This version of 4000 Dhivya Prabhandham is prepared by a group of Sri Vaishnavas from Bahrain for Sri Ahobila Muth for easy recitation of the verses. Use of this MS-Word document for commercial purposes is prohibited. For more information contact Sri Venkat at rmvenkat@yahoo.com.

# திருநெடுந்தாண்டகம்

2052:##
மின்னுருவாய் முன்னுருவில் வேதம் நான்காய்*
 விளக்கொளியாய் முளைத்தெழுந்த திங்கள் தானுய்,*
பின்னுருவாய் முன்னுருவில் பிணி மூப்பில்லாப்*
 பிறப்பிலியாய் இறப்பதற்கே எண்ணுது,* எண்ணும்-
பொன்னுருவாய் மணியுருவில் பூதம் ஐந்தாய்ப்*
 புனலுருவாய் அனலுருவில் திகழும் சோதி,*
தன்னுருவாய் என்னுருவில் நின்ற எந்தை*
 தளிர்புரையும் திருவடிஎன் தலை மேலவே. (2) 1

2053:
பாருருவில் நீரெரிகால் விசும்புமாகிப்*
 பல்வேறு சமயமுமாய்ப் பரந்து நின்ற,*
ஏருருவில் மூவருமே என நின்ற,*
 இமையவர்தம் திருவுருவேறு எண்ணும் போது,*
ஓருருவம் பொன்னுருவம் ஒன்று செந்தீ*
 ஒன்றுமா கடலுருவம் ஒத்து நின்ற,*
மூவுருவும் கண்டபோது ஒன்றும் சோதி*
 முகிலுருவம் எம்மடிகள் உருவம் தானே. 2

2054:
திருவடிவில் கருநெடுமால் சேயன் என்றும்*
 திரேதைக்கண் வளையுருவாய்த் திகழ்ந்தான் என்றும்,*
பெருவடிவில் கடலமுதம் கொண்ட காலம்*
 பெருமானைக் கருநீல வண்ணன் தன்னை,*
ஒருவடிவதோர் உருவென்று உணரலாகாது*
 ஊழிதோறூழி நின்று ஏத்தல் அல்லால்,*
கருவடிவில் செங்கண்ண வண்ணன் தன்னைக்*
 கட்டுரையே யாரொருவர் காண்கிற்பாரே? 3

2055:
இந்திரற்கும் பிரமற்கும் முதல்வன் தன்னை*
 இருநிலம்கால் தீநீர்விண் பூதம் ஐந்தாய்,*
செந்திறத்த தமிழோசை வடசொல்லாகித்*
 திசை நான்குமாய்த் திங்கள் ஞாயிருகி,*
அந்தரத்தில் தேவர்க்கும் அறிய லாகா-
 அந்தணனை* அந்தணர்மாட்டு அந்தி வைத்த-
மந்திரத்தை,* மந்திரத்தால் மறவாது என்றும்*
 வாழுதியேல் வாழலாம் மடநெஞ்சமே. 4

2056:
ஒண்மிதியில் புனலுருவி ஒருகால் நிற்ப*
 ஒருகாலும் காமருசீர் அவுணன் உள்ளத்து,*
எண்மதியும் கடந்து அண்ட மீது போகி*
 இருவிசும்பின் ஊடுபோய் எழுந்து* மேலைத்-
தண்மதியும் கதிரவனும் தவிர ஓடித்*
 தாரகையின் புறம்தடவி அப்பால் மிக்கு,*
மண்முழுதும் அகப்படுத்து நின்ற எந்தை*
 மலர்புரையும் திருவடியே வணங்கினேனே. 5

2057:
அலம்புரிந்த நெடுந்தடக்கை அமரர் வேந்தன்*
 அஞ்சிறைப்புள் தனிப்பாகன் அவுணர்க் கென்றும்,*
சலம் புரிந்தங்கு அருளில்லாத் தன்மை யாளன்*
 தானுகந்த ஊரெல்லாம் தன்தாள் பாடி,*
நிலம்பரந்து வரும் கலுழிப் பெண்ணை ஈர்த்த*
 நெடுவேய்கள் படுமுத்த முந்த உந்தி,*
புலம்பரந்த பொன்விளக்கும் பொய்கை வேலிப்*
 பூங்கோவலூர் தொழுதும் போது நெஞ்சே! 6

2058:
வற்புடைய வரைநெடுந்தோள் மன்னர் மாள*
 வடிவாய மழுவேந்தி உலகம் ஆண்டு,*
வெற்புடைய நெடுங்கடலுள் தனிவேலுய்த்த*
 வேள்முதலா வென்றானூர் விந்தம் மேய,*
கற்புடைய மடக்கன்னி காவல் பூண்ட*
 கடிபொழில்சூழ் நெடுமறுகில் கமல வேலி,*
பொற்புடைய மலையரையன் பணிய நின்ற*
 பூங்கோவலூர் தொழுதும் போது நெஞ்சே! 7

2059:##
நீரகத்தாய்! நெடுவரையின் உச்சி மேலாய்!*
 நிலாத்திங்கள் துண்டகத்தாய்! நிறைந்த கச்சி–
ஊரகத்தாய்,* ஒண்துறைநீர் வெஃகா உள்ளாய்!*
 உள்ளுவார் உள்ளத்தாய்,* உலகம் ஏத்தும்–
காரகத்தாய்! கார்வானத் துள்ளாய்! கள்வா!*
 காமருபூங் காவிரியின் தென்பால் மன்னு–
பேரகத்தாய்,* பேராது என் நெஞ்சின் உள்ளாய்!*
 பெருமான்உன் திருவடியே பேணினேனே. (2) 8

2060:
வங்கத்தால் மாமணிவந்து உந்து முந்நீர்–
 மல்லையாய்!* மதிள்கச்சி ஊராய்! பேராய்,*
கொங்கத்தார் வளங்கொன்றை அலங்கல் மார்வன்*
 குலவரையன் மடப்பாவை இடப்பால் கொண்டான்,*
பங்கத்தாய்! பாற்கடலாய்! பாரின் மேலாய்!*
 பனிவரையின் உச்சியாய்! பவள வண்ணா,*
எங்குற்றாய் எம்பெருமான்! உன்னை நாடி*
 ஏழையேன் இங்ஙனமே உழிதருகேனே! 9

2061:
பொன்னானாய்! பொழிலேழும் காவல் பூண்ட–
 புகழானாய்!* இகழ்வாய தொண்டனேன் நான்,*
'என்னானாய்? என்னானாய்?' என்னல் அல்லால்*
 என்னறிவன் ஏழையேன்,* உலகம் ஏத்தும்–
தென்னானாய் வடவானாய் குடபால் ஆனாய்*
 குணபால தாயினாய் இமையோர்க்கு என்றும்–
முன்னானாய்* பின்னானார் வணங்கும் சோதி!*
 திருமூழிக் களத்தானாய் முதலானாயே! 10

2062:
பட்டுடுக்கும் அயர்ந்திரங்கும் பாவை பேணாள்*
 பனிநெடுங் கண்ணீர்ததும்பப் பள்ளி கொள்ளாள்,*
எள்துணைப்போது என்குடங்கால் இருக்க கில்லாள்*
 'எம்பெருமான் திருவரங்க மெங்கே?' என்னும்*
'மட்டுவிக்கி மணிவண்டு முரலும் கூந்தல்*
 மடமானை இதுசெய்தார் தம்மை,* மெய்யே-
கட்டுவிச்சி சொல்', என்னச் சொன்னாள் 'நங்காய்!*
 கடல்வண்ணர் இதுசெய்தார் காப்பார் ஆரே?' 11

2063:
நெஞ்சுருகிக் கண்பனிப்ப நிற்கும் சோரும்*
 நெடிதுயிர்க்கும் உண்டறியாள் உறக்கம் பேணாள்,*
'நஞ்சரவில் துயிலமர்ந்த நம்பீ!' என்னும்*
 'வம்பார் பூம்வயலாலி மைந்தா' என்னும்,*
அஞ்சிறைய புட்கொடியே ஆடும் பாடும்*
 'அணியரங்கம் ஆடுதுமோ தோழீ' என்னும்,*
என்சிறகின் கீழடங்காப் பெண்ணைப் பெற்றேன்*
 இருநிலத்துஓர் பழிபடைத்தேன் ஏபாவமே! 12

2064:
'கல்லெடுத்துக் கல்மாரி காத்தாய்!' என்றும்*
 'காமரு பூங்கச்சி ஊரகத்தாய்!' என்றும்,*
'வில்லிறுத்து மெல்லியல்தோள் தோய்ந்தாய்!' என்றும்*
 'வெஃகாவில் துயிலமர்ந்த வேந்தே!' என்றும்,*
'மல்லடர்த்து மல்லரை அன்றுஅட்டாய்!' என்றும்,*
 'மாகீண்ட கைத்தலத்து என் மைந்தா!' என்றும்,*
சொல்லெடுத்துத் தன்கிளியைச் சொல்லே என்று*
 துணைமுலைமேல் துளிசோரச் சோர்கின்றாளே! 13

2065:
முளைக்கதிரைக் குறுங்குடியுள் முகிலை* மூவா-
 மூவுலகும் கடந்து அப்பால் முதலாய் நின்ற,*
அளப்பரிய ஆரமுதை அரங்கம் மேய-
 அந்தணனை* அந்தணர்தம் சிந்தை யானை,*
விளக்கொளியை மரகதத்தைத் திருத்தண்காவில்*
 வெஃகாவில் திருமாலைப் பாடக் கேட்டு*
'வளர்த்ததனால் பயன்பெற்றேன் வருக!' என்று*
 மடக்கிளியைக் கைகூப்பி வணங்கினாளே. 14

2066:##
கல்லுயர்ந்த நெடுமதிள்சூழ் கச்சி மேய-
 களிறு என்றும்* கடல்கிடந்த கனியே! என்றும்,*
அல்லியம்பூ மலர்ப்பொய்கைப் பழன வேலி*
 அணியழுந்தூர் நின்றுகந்த அம்மான் என்றும்,*
சொல்லுயர்ந்த நெடுவீணை முலைமேல் தாங்கித்*
 தூமுறுவல் நகைஇறையே தோன்ற நக்கு,*
மெல்விரல்கள் சிவப்பெய்தத் தடவி ஆங்கே*
 மென்கிளிபோல் மிகமிழற்றும் என்பேதையே. 15

2067:##
கன்றுமேய்த்து இனிதுகந்த காளாய்! என்றும்,*
 கடிபொழில்சூழ் கணபுரத்தென் கனியே! என்றும்,*
மன்றமரக் கூத்தாடி மகிழ்ந்தாய்! என்றும்,*
 வடதிருவேங்கடம் மேய மைந்தா! என்றும்,*
வென்றுஅசுரர் குலங்களைந்த வேந்தே! என்றும்,*
 விரிபொழில்சூழ் திருநறையூர் நின்றாய்! என்றும்,*
துன்றுகுழல் கருநிறத்தென் துணையே என்றும்*
 துணைமுலைமேல் துளிசோரச் சோர்கின்றாளே! (2) 16

2068:
பொங்கார் மெல்லிளங்கொங்கை பொன்னே பூப்பப்*
 பொருகயல் கண்ணீர் அரும்பப் போந்து நின்று*
செங்கால மடப்புறவம் பெடைக்குப் பேசும்*
 சிறுகுரலுக்கு உடலுருகிச் சிந்தித்து,* ஆங்கே–
தண்காலும் தண்குடந்தை நகரும் பாடித்*
 தண்கோவலூர் பாடி ஆடக் கேட்டு,*
நங்காய்!நங் குடிக்கிதுவோ நன்மை? என்ன*
 நறையூரும் பாடுவாள் நவில்கின்றாளே! 17

2069:
கார்வண்ணம் திருமேனி கண்ணும் வாயும்*
 கைத்தலமும் அடியிணையும் கமல வண்ணம்,*
பார்வண்ண மடமங்கை பத்தர் பித்தர்*
 பனிமலர்மேல் பாவைக்குப் பாவம் செய்தேன்,*
ஏர்வண்ண என்பேதை என்சொல் கேளாள்*
 எம்பெருமான் திருவரங்க மெங்கே? என்னும்,*
நீர்வண்ணன் நீர்மலைக்கே போவேன் என்னும்*
 இதுவன்றோ நிறையழிந்தார் நிற்குமாறே? 18

2070:
முற்றாரா வனமுலையாள் பாவை* மாயன்–
 மொய்யகலத்து உள்ளிருப்பாள்* அஃதும் கண்டும்–
அற்றாள்,*தன் நிறையழிந்தாள் ஆவிக்கின்றாள்*
 அணியரங்கம் ஆடுதுமோ தோழீ! என்னும்,*
பெற்றேன் வாய்ச் சொல் இறையும் பேசக் கேளாள்*
 பேர்பாடித் தண்குடந்தை நகரும் பாடி,*
பொற்றாமரைக் கயம் நீராடப் போனாள்*
 பொருவற்றாள் என்மகள் உம் பொன்னும் அஃதே. 19

2071:
தேராளும் வாளரக்கன் செல்வம் மாளத்*
 தென்னிலங்கை முன்மலங்கச் செந்தீ ஒல்கி,*
பேராளன் ஆயிரம்தோள் வாணன் மாளப்*
 பொருகடலை அரண்கடந்து புக்கு மிக்க–
பாராளன்,* பாரிடந்து பாரை உண்டு*
 பாருமிழ்ந்து பாரளந்து* பாரை ஆண்ட–
பேராளன்,* பேரோதும் பெண்ணை மண்மேல்*
 பெருந்தவத்தள் என்றல்லால் பேசலாமே? 20

2072:##
மைவண்ண நறுங்குஞ்சிக் குழல்பின் தாழ*
 மகரம்சேர் குழை இருபாடு இலங்கியாட,*

எய்வண்ண வெஞ்சிலையே துணையா* இங்கே-
இருவராய் வந்தார்என் முன்னே நின்றார்*
கைவண்ணம் தாமரைவாய் கமலம் போலும்*
கண்ணிணையும் அரவிந்தம் அடியும் அஃதே,*
அவ்வண்ணத்தவர் நிலைமை கண்டும் தோழீ!*
அவரைநாம் தேவரென்று அஞ்சினோமே! (2) 21

2073:
நைவளமொன்று ஆராயா நம்மை நோக்கா*
நாணினார் போல்இறையே நயங்கள் பின்னும்,*
செய்வளவில் என்மனமும் கண்ணும்ஓடி
எம்பெருமான் திருவடிக்கீழ் அணைய,* இப்பால்-
கைவளையும் மேகலையும் காணேன்* கண்டேன்-
கனமகரக் குழையிரண்டும் நான்கு தோளும்,*
எவ்வளவுண்டு எம்பெருமான் கோயில்? என்றேற்கு*
இதுவன்றோ எழிலாலி? என்றார் தாமே. 22

2074:
உள்ளூரும் சிந்தைநோய் எனக்கே தந்து* என்-
ஒளிவளையும் மாநிறமும் கொண்டார் இங்கே,*
தெள்ளூரும் இளந்தெங்கின் தேறல் மாந்திச்*
சேலுகளும் திருவரங்கம் நம்மூர் என்ற*
கள்ளூரும் பைந்துழாய் மாலை யானைக்*
கனவிடத்தில் யான்காண்பன் கண்ட போது,*
புள்ளூரும் கள்வாநீ போகேல், என்பன்*
என்றாலும் இதுநமக்கோர் புலவி தானே? 23

2075:
இருகையில் சங்கிவை நில்லா எல்லே பாவம்!*
இலங்கொலிநீர் பெரும்பௌவம் மண்டி உண்ட,*
பெருவயிற்ற கருமுகிலே ஒப்பர் வண்ணம்*
பெருந்தவத்தர் அருந்தவத்து முனிவர் சூழ*
ஒருகையில் சங்கு ஒருகை மற்றாழி ஏந்தி*
உலகுண்ட பெருவாயர் இங்கே வந்து,*என்-
பொருகயல்கண் நீரரும்பப் புலவி தந்து*
புனலரங்கம் ஊரென்று போயினாரே! 24

2076:
மின்னிலங்கு திருவுருவும் பெரிய தோளும்*
கரிமுனிந்த கைத்தலமும் கண்ணும் வாயும்,*
தன்னலர்ந்த நறுந்துழாய் மலரின் கீழே*
தாழ்ந்திலங்கும் மகரம்சேர் குழையும் காட்டி*
என்னலனும் என்னிறையும் என்சிந்தையும்*
என்வளையும் கொண்டு என்னை ஆளுங் கொண்டு,*
பொன்னலர்ந்த நறுஞ்செருந்திப் பொழிலினூடே*
புனலரங்கம் ஊரென்று போயினாரே! 25

2077:
தேமருவு பொழிலிடத்து மலாந்த போதைத்*
தேனதனை வாய்மடுத்து உன் பெடையும் நீயும்,*
பூமருவி இனிதமர்ந்து பொறியில் ஆர்ந்த*
அறுகால சிறுவண்டே! தொழுதேன் உன்னை,*
ஆமருவி நிரைமேய்த்த அமரர் கோமான்*
அணியழுந்தூர் நின்றானுக்கு இன்றே சென்று,*

நீமருவி அஞ்சாதே நின்றோர் மாது*
 நின்நயந்தாள் என்றிறையே இயம்பிக்காணே. 26

2078:##
செங்கால மடநாராய்! இன்றே சென்று*
 திருக்கண்ணபுரம் புக்கு என் செங்கண்மாலுக்கு,*
என்காதல் என்துணைவர்க்கு உரைத்தி ஆகில்*
 இதுஒப்பது எமக்கின்பம் இல்லை,* நாளும்-
பைங்கான மீதெல்லாம் உனதே யாகப்*
 பழனமீன் கவர்ந்துண்ணத் தருவன்,* தந்தால்-
இங்கே வந்து இனிதிருந்து உன் பெடையும் நீயும்*
 இருநிலத்தில் இனிதுஇன்பம் எய்தலாமே. (2) 27

2079:
தென்னிலங்கை அரண்சிதறி அவுணன் மாளச்*
 சென்றுஉலகம் மூன்றினையும் திரிந்தோர் தேரால்,*
மன்னிலங்கு பாரதத்தை மாள ஊர்ந்த*
 வரையுருவின் மாகளிற்றைத் தோழீ,* என்தன்-
பொன்னிலங்கு முலைக்குவட்டில் பூட்டிக் கொண்டு*
 போகாமை வல்லேனாய்ப் புலவி எய்தி,*
என்னிலங்கம் எல்லாம் வந்துஇன்பம் எய்த*
 எப்பொழுதும் நினைந்துருகி இருப்பன் நானே. 28

2080:##
அன்றாயர் குலமகளுக்கு அரையன் தன்னை*
 அலைகடலைக் கடைந்தடைத்த அம்மான் தன்னை,*
குன்றாத வலியரக்கர் கோனை மாளக்*
 கொடுஞ்சிலைவாய்ச் சரந்துரந்து குலம் களைந்து-
வென்றானை,* குன்றெடுத்த தோளினானை*
 விரிதிரைநீர் விண்ணகரம் மருவி நாளும்-
நின்றானை,* தண்குடந்தைக் கிடந்த மாலை*
 நெடியானை அடிநாயேன் நினைந்திட்டேனே. (2) 29

2081:##
மின்னுமாமழை தவழும் மேக வண்ணா!*
 விண்ணவர்தம் பெருமானே! அருளாய், என்று,*
அன்னமாய் முனிவரோடு அமரர் ஏத்த*
 அருமறையை வெளிப்படுத்த அம்மான் தன்னை,*
மன்னு மாமணி மாட வேந்தன்*
 மானவேல் பரகாலன் கலியன் சொன்ன*
பன்னியநூல் தமிழ்மாலை வல்லார்* தொல்லைப்-
 பழவினையை முதலரிய வல்லார் தாமே. (2) 30

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

---